**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L.,(Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் நாள் வியாழக்கிழமை
பராபவ வருடம் சித்திரை மாதம் 17 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 229/2015**
**CNR No.TNCG120005352015**

அரசு தரப்பில்
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
மாமல்லபுரம் காவல் நிலையம்,
குற்ற எண் 363/2015.

.. குற்றமுறையிடுபவர்.

எதிர்

1) டில்லி பாபு, வயது 32/2015, த/பெ.முனுசாமி
2) சுமன், வயது 30/2015, த/பெ.செல்லதுரை
3) சிலம்பு, வயது 27/2015, த/பெ.சின்னதுரை
4) செல்வகுமார், வயது 28/2015, த/பெ.பீலாமோகன்

.. எதிரிகள்.

**Case Summary**

| Sl.No. | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | A1 to A4 - Anticipatory bail |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 03.12.2015 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

<table>
<tr><td>4</td><td>The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td>15.02.2016</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions Under Section 317 of the Code.</td><td>i) CMP No.341/2026 - petition u/s.359 BNSS/320(2) Cr.P.C.- petition dismissed.<br>ii)CMP No.417/2026 - petition u/s.311 Cr.P.C.- petition allowed.</td></tr>
<tr><td>6</td><td>Date of examination in-chief and cross- examination of a witness:</td><td><table>
<tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>PW4</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>PW5</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under Section 313 of the Code:</td><td>27.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending/recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof.</td><td>NIL</td></tr>
</table>

இவ்வழக்கு 03.12.2015 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1

அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.C.சுதாகர், திரு.R.வேலு, திருமதி.S.இலக்கியா ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1.** எதிரிகள் மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், கடந்த 28.09.2015ம் தேதி பகல் 2.00 மணியளவில் பவளக்கார சத்திரம் கிராமம், O.M.R. சாலை பக்கத்தில் உள்ள தோட்டத்தின் காம்பவுண்ட் சுவரில் புகார்தாரர் ஜெய்பீம் மற்றும் சாட்சிகள் அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் ஆகியோர்கள் தமிழக முதல்வரின் வருகையையொட்டி விளம்பரம் எழுதுவதற்காக வெள்ளை அடித்துக் கொண்டிருந்த போது 1 முதல் 4 எதிரிகள் வந்து மேற்படி புகார்தாரர் மற்றும் சாட்சிகளை பார்த்து "ஓத்தா தெவிடியா மகனுங்களா" என்று அசிங்கமாக பேசி மேற்படி ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி ஆகியோர்களை கத்தி, அன்னசுஉடை மற்றும் தடியால் தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியும் ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் ஆகியோர்களை பார்த்து கத்தியை காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ்

இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் வழங்கியும், எதிரிகளிடம் குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றங்கள் குறித்து விளக்கிக்கூறி வினவியபோதும், ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 (3 எண்ணிக்கைகள்), 506(ii)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோதும் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எதிரிகளின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரை குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

**5.1.** புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 28.09.2015ம் தேதி பவளக்காரசத்திரம் அருகே காம்பவுண்ட் சுவரில் பகல் 2.00 மணியளவில் தானும், சாட்சிகள் அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் ஆகியோர் வெள்ளை அடித்துக் கொண்டிருந்த போது அங்கு கும்பலாக இருந்தவர்களில் யாரோ தங்களை பார்த்து அசிங்கமாக பேசி கத்தி, அன்னக்கூடை மற்றும் தடி போன்ற ஆயுதங்களுடன் தங்களை தாக்கி கொலை செய்தவிடுவதாக மிரட்டல் விடுத்தார்கள் என்றும், யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது என்றும், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது

அதில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2.** அ.சா.2, அ.சா.3, அ.சா.4 அனைவரும் தங்களது சாட்சியத்தில், கடந்த 28.09.2015ம் தேதி பவளக்கார சத்திரம் அருகே காம்பவுண்ட் சுவரில் பகல் 2.00 மணியளவில் வெள்ளை அடித்துக் கொண்டிருந்த போது அங்கு கும்பலாக இருந்தவர்களில் யாரோ தங்களை பார்த்து அசிங்கமாக பேசி கத்தி, அண்ணக்கூடை மற்றும் தடி போன்ற ஆயுதங்களுடன் தாக்கி கொலை செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்தார்கள் என்றும், யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது என்று கூறியதால் மேற்படி அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள்.

**5.3.** அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 03.10.2015ம் தேதி மாலை 6.45 மணியளவில் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக சசிக்குமார் நிலைய பொறுப்பில் இருந்த போது ஜெய்பீம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.363/2015 இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324, 506(i) –ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் புஷ்பா, ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகள் ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் மற்றும் மேற்படி பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரிகள் அனைவரும் முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், காயம்பட்ட நபர்களான ஜெய்பீம்,

அலெக்சாண்டர், பாண்டி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இர்பான்ஆசான் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடுகள் பெற்று, காயச்சான்றுகள் வழங்கிய மருத்துவர் சபரினா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுகள் பெற்று, வழக்கின் சட்டப்பிரிவினை 147, 294(b), 324, 506(i) இ.த.ச.விலிருந்து 294(b), 324, 506(ii) இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச–வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், விபத்து பதிவேடுகள் மூன்று எண்ணிக்கை முறையே அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்றுகள் மூன்று எண்ணிக்கை முறையே அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.11 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சி கூறுவது பொய் சாட்சி என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், 1

முதல் 4 எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 (3 எண்ணிக்கைகள்), 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**8.** தீர்வு:– கடந்த 28.09.2015ம் தேதி பகல் 2.00 மணியளவில் பவளக்கார சத்திரம் கிராமம், O.M.R. சாலை பக்கத்தில் உள்ள தோட்டத்தின் காம்பவுண்ட் சுவரில் புகார்தாரர் அ.சா.1 ஜெய்பீம் மற்றும் அ.சா.2 அலெக்சாண்டர், அ.சா.3 பாண்டி, அ.சா.4 கந்தன் ஆகியோர்கள் தமிழக முதல்வரின் வருகையையொட்டி விளம்பரம் எழுதுவதற்காக வெள்ளை அடித்துக் கொண்டிருந்த போது 1 முதல் 4 எதிரிகள் வந்து மேற்படி மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையானோரை பார்த்து "ஓத்தா தெவிடியா மகனுங்களா" என்று அசிங்கமாக பேசி மேற்படி அ.சா.1 ஜெய்பீம், அ.சா.2 அலெக்சாண்டர், அ.சா.3 பாண்டி ஆகியோர்களை கத்தி, அன்னகூடை மற்றும் தடியால் தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தி அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களை பார்த்து கத்தியை காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்தார்கள் என்று எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 ஜெய்பீம் தனது புகாரில், கடந்த 28.09.2015ம் தேதி பூஞ்சேரி அடுத்த பவளக்கார சத்திரம் என்ற இடத்தில் பகல் சுமார் 2.00 மணியளவில் டில்லிபாபு, சுமன், சிலம்பு, செல்வகுமார் மற்றும் சிலர் திடீரென வந்து தன்னையும், தன்னுடன் இருந்த அலெக்சாண்டர், பாண்டி, கந்தன், ஆகியோர்களையும் கத்தி, அன்னகூடை, தடி போன்ற பயங்கர ஆயுதங்களை கொண்டு தாக்கி கொலை மிரட்டல்

விடுத்தார்கள் என்று புகாரில் தெரிவித்துள்ளார். மேற்படி புகாரை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சசிக்குமார் பெற்று மனு ரசீது எண் 437/2015 கொடுத்து பின்னர் 03.10.2015ம் தேதி நிலைய குற்ற எண். 363/2015 இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324, 506(i)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் வழக்கின் சட்டப்பிரிவுனை 147, 294(b), 324, 506(i) இ.த.ச.விலிருந்து 294(b), 324, 506(ii) இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.** இவ்வழக்கில் மேற்படி புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபர்களான ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் மற்றும் எதிரிகள் 1 முதல் 4 ஆகிய இரு தரப்பினரும் கடந்த 16.03.2026 அன்று இவ்வழக்கில் சமாதானமாக போவதாக கூறி சட்டப்பிரிவு 359 BNSS/320(2) Cr.P.C.–ன் கீழ் மனு தாக்கல் செய்தார்கள். எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் சட்டப்பிரிவுகள் 294(b), 324 இ.த.ச. ஆகிய பிரிவுகள் சமாதானமாக போகக்கூடிய குற்ற பிரிவுகள் இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தால் அன்றைய தினமே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி புகார்தாரர்/காயம்பட்ட நபரான ஜெய்பீம் அ.சா.1 ஆகவும், காயம்பட்ட நபர்களான அலெக்சாண்டர் அ.சா.2 ஆகவும், பாண்டி அ.சா.3 ஆகவும், பாதிக்கப்பட்ட நபரான கந்தன் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டார்கள்.

**11.** இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக முன்னிலைபடுத்தப்பட்டுள்ள மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோரின் சாட்சியங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில், கும்பலில் இருந்த யாரோ அ.சா.1 முதல் அ.சா.4 ஐ அசிங்கமாக பேசி, அ.சா.1 முதல் அ.சா.3 ஐ கத்தி,

அன்னக்கூடை, தடி போன்ற ஆயுதங்களால் தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எனவே, மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4–ன் சாட்சியங்கள் எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபடுத்துவதாக இல்லை.

**12.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, காயம்பட்ட நபர்களாக அ.சா.2, அ.சா.3, பாதிக்கப்பட்ட நபரான அ.சா.4 மற்றும் எதிரிகள் ஆகிய இருதரப்பினரும் சமாதானமாக போவதாக கூறி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளதால் வழக்கின் மற்ற சாட்சிகளை விசாரணை செய்வதால் எந்த பலனும் இல்லை என கருதி மற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக தற்போது மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் முருகன் என்பவரை விசாரணை செய்யக்கோரி அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் முருகன் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.5 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில் புகார்தாரர் அ.சா.1, காயம்பட்ட அ.சா.2, அ.சா.3, பாதிக்கப்பட்ட அ.சா.4 அனைவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையிலும், மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 மற்றும் எதிரிகளும் சமாதானமாக போவதாக கூறி சட்ட பிரிவு 359 BNSS/320(2) Cr.P.C.–ன் கீழ்

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், அ.சா.5 ன் அலுவல் ரீதியான சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**14. முடிவாக**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, 1 முதல் 4 எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324(3 **எண்ணிக்கைகள்**), 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரிகள் 1 முதல் 4 மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**15.** இவ்வழக்கில் தடய சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்பதால் சொத்து குறித்து உத்தரவு ஏதுமில்லை.

**16.** எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில் மேல் முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையிடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப் பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 30.04.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு:–

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஜெய்பீம் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. அலெக்சாண்டர் |
| அ.சா.3 | திரு. பாண்டி |
| அ.சா.4 | திரு. கந்தன் |
| அ.சா.5 | திரு. முருகன், காவல் உதவி ஆய்வாளர் |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.09.2015 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 28.09.2015 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 03.10.2015 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 03.10.2015 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 03.10.2015 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 28.09.2015 | விபத்து பதிவேடு (அ.சா.1) |
| அ.சா.ஆ.7 | 28.09.2015 | விபத்து பதிவேடு (அ.சா.3) |
| அ.சா.ஆ.8 | 28.09.2015 | விபத்து பதிவேடு (அ.சா.2) |
| அ.சா.ஆ.9 | -- | காயச்சான்று (அ.சா.1) |
| அ.சா.ஆ.10 | -- | காயச்சான்று (அ.சா.2) |
| அ.சா.ஆ.11 | -- | காயச்சான்று (அ.சா.3) |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.12 | 20.10.2015 | சட்டப்பிரிவு மறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப் பொருள்:– இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சி:– இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள்:– இல்லை.

(Sd) S.Vineeth, 30.04.2026
மா.உ.நீ.ம.நீ.ந./தி.க.கு.